# කොම්ප්ට්‍රොලර් ජනරාල් කාර්යාලය
# கொம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகம்
# Comptroller General's Office

## ආර්ථික ප්‍රතිපත්ති හා සැලසුම් ක්‍රියාත්මක කිරීමේ අමාත්‍යාංශය
## பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சு
## Ministry of Economic Policies & Plan Implementation

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01
செயலகம், கொழும்பு 01
The Secretariat, Colombo 01

කොම්ප්ට්‍රොලර් ජනරාල්
கொம்ப்ரோலர் ஜெனரல் 0112151452
Comptroller General

පොදු
பொது 0112151425
General

ෆැක්ස්/தொலை நகல் / Fax : 0112151417
Web Site : www.treasury.gov.lk
E-Mail : cgo@mo.treasury.gov.lk


මගේ අංකය
எனது இல.
My No } CGO/ASM/Policy/Cir/VOL-II

දිනය
திகதி
Date } 2022.01.03

**ஆதன முகாமைத்துவ சுற்றுநிருப இல. 01/2022**

அமைச்சுக்களின் செயலாளர்கள்
இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
பொதுக் கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளின் தலைவர்கள்
அரச வங்கிகள் மற்றும் அரச உடமைக் கம்பனிகளின் தலைவர்கள் அனைவருக்கும்

**அரசாங்கத்தின் நிதியல்லா ஆதன முகாமைத்துவம் - கட்டிடங்களின் பயன்பாடு**

அரசாங்கத்தின் நிதியல்லா ஆதனத்தின் முறையான முகாமைத்துவத்தை உறுதி செய்வதற்காக, அரசாங்க நிறுவனங்களால் பயன்படுத்தப்படும் கட்டிடங்களின் தகவல்களை புதுப்பிப்பதற்கான தேவை வலியுறுத்தப்பட்டு 2017 ஜூன் 28 ஆந் திகதிய 01/2017 ஆம் இலக்க ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கை, 2020 சனவரி 03 ஆந் திகதிய 01/2017(I) ஆம் இலக்க ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கை மற்றும் 2021 பெப்ரவரி 18 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கை என்பவற்றின் பால் உங்களின் கவனம் செலுத்தப்படுகிறது.

02. இதற்கமைவாக, அனைத்து அரசு நிறுவனங்களின் தலைவர்களும் 2021 டிசம்பர் 31 ஆந் திகதி அன்றுள்ளவாறு அந்தந்த அரசு நிறுவனத்திற்குச் சொந்தமான, வாடகைக்கு அல்லது குத்தகைக்கு எடுக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட கட்டிடங்களின் இற்றைப் -படுத்தப்பட்ட தகவல்களை இத்துடன் இணைக்பட்டுள்ள பின்னிணைப்பின்படி மின்னஞ்சலினூடாக (cgo@mo.treasury.gov.lk) கொம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு 2022 பெப்ரவரி 15 ஆந் திகதிக்கு முன்னர் சமர்ப்பித்தல் வேண்டும்.

03. இந்த விடயத்தில் உங்கள் ஒத்துழைப்பு மிகவும் மெச்சத்தக்கது.

ஒப்பம்/கே.ஏ. ரம்யா காந்தி
கொம்ப்ரோலர் ஜெனரல்

பிரதிகள்:

1. சனாதிபதியின் செயலாளர்
2. பிரதமரின் செயலாளர்
3 அமைச்சரவையின் செயலாளர்
4. கணக்காய்வாளர் நாயகம்